# உலக இலக்கியங்களும் தமிழ் நாவல் போக்குகளும்

த. ஜோஸ்பின் பியூலா & முனைவர். ஜா. லாலி ஏதேஸ்
தமிழ் ஆய்வு மையம்,முஸ்லீம் கலைக்கல்லூரி திருவிதாங்கோடு
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

102

முன்னுரை:

கதை இலக்கியம் தமிழ் இலக்கியத்தின் பழமையான மரபில் ஒன்றாகும். இது இரண்டாயிரமாண்டு தொன்மையுடையது. மேலை நாட்டு இலக்கிய வகையின் தாக்கத்தால் தான் நாவல் என்ற புதிய வகை உருவானது எனலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின்; இறுதியில் தோன்றிய பிரதாப முதலியார் சரித்திரம் தொடங்கி பல தொடக்க கால நாவல்கள் ஆங்கில இலக்கிய நாவலாசிரியரான வால்டர் ஸ்காட்டின் சாகசக் கற்பனை பாணியை பின்பற்றி அமைந்தவையாகும். உலக இலக்கியத்தின் தாக்கத்தால் தமிழில் உருவான நாவல்களின் போக்குகளைக் குறித்து இந்த ஆய்வில் நாம் பார்க்கலாம்.

விடுதலைக்குப் பின் தமிழ் நாவல் போக்குகள்:

இந்த விடுதலைக்குப் பின் தமிழ் நாவல் வரலாற்றில் ரஷ்ய நாவல் இலக்கியத்தின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. ரஷ்ய இலக்கியத்தி;ன் மிக பெரிய ஆளுமைகளான டால்ஸ்டாயஇ; தஸ்தாயெல்ஸ்கிஇ செகா புஷ்கினஇ; கார்க்கி என இவர்களைக் கூறலாம். கரம்சோல் சகோதரர்கள் குற்றமும் தண்டனையும்இ அன்னா கா{னா போரும் அமைதியும் போன்ற நாவல்கள் புகழ் பெற்ற நாவல்களாகும். குறிப்பாக சொல்ல வேண்டுமானால் 1980-களில் தமிழ் இலக்கிய உலகில் தஸ்தாயெல்ஸ்கி பெரிதும் கொண்டாடப்பட்டார். “தஸ்தாயெல்ஸ்கியின் வெண்ணிற இரவுகளஇ; அசடனஇ; குற்றமும் தண்டனையும் போன்ற உன்னதமான படைப்புகளுக்கு நிகராக எந்தத் தமிழ் படைப்பாளியாலும் எழுத முடியவில்லை”1 என்று வண்ணநிலவன் குறிப்பிடுகிறார்.

தமிழில் ரஷ்ய இலக்கியத்தி;ன் தாக்கத்தால் சோஷலிச யதார்த்தவாதப் போக்கு அறிமுகமானது. தொ. மு. சி ரகுநாதனின் பஞ்சும் பசியும் நாவல் முதல் சோஷலிச யதார்த்தவாத நாவலாக அடையாளப்படுத்தப்பட்டது. அது போல டி. செல்வராஜின் மலரும் சருகும் நாவல்இ பொன்னீலனின் புதிய தரிசனங்கள் நாவல் ஆகியவை சோஷலிச எதார்த்தத்தை முன் வைத்த முக்கியமான நாவல்களாகும். அதன் பிறகு ஜெயகாந்தன் தமிழ் நாவல் உலகில் மிக சிறந்த செல்வாக்குமிக்க எழுத்தாளராக விளங்கினார். இவரது நாவல்களில் போராட்ட குணம் மனிதநேய பாங்கு ஆகியவை ரஸ்ய நாவலின் தாக்கத்தில் உருவானது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

தமிழ் நாவலில் நவீனத்துவ தாக்கம்:

1970-களில் தமிழ் இலக்கிய போக்கில் நவீனத்துவம் மிகப் பெரிய செல்வாக்கைப் பெற்றது. அச்சு எந்திரங்களின் வருகை தரப்படுத்தப்பட்ட கல்வி அரசியலில் ஜனநாயகத் தன்மை இரண்டாம் உலக போரை ஒட்டிய சமூகமாற்றங்கள் ஆகியவை நவீனத்துவ சிந்தனை உருவாக காரணமாக இருந்தன. இந்த

நவீனத்துவம் மிக முக்கியமான பல விளைவுகளை உருவாக்கின. மத மூடதனத்திற்கு எதிரான விஞ்ஞான மனப்பான்மையை உருவாக்கியது. தனி மனித சுதந்திரம் குறித்த எண்ணம் வலுப்பெற்றது. சமமான கல்வி சமத்துவத்தை ஏற்படுத்தியது. பெண்களை இரண்டாம் தரமாக பார்த்த சூழல் மாறி சம உரிமையை நோக்கிய பார்வையை முன்வைத்தது.

மதத்தை பரப்பி சமய போதனைகளை கூறுவது தான் இலக்கியம் என்ற போக்கை மாற்றி மதவிழுமியங்களை கேள்விக்குள்ளாக்கியது. ஆகையினால் புதிய கலை வடிவங்கள் தோன்றின. குறிப்பாக தமிழில் மார்க்சிய சித்தாந்த எழுத்துஇ தாண்டி இன்னொரு விதமான எழுத்தினை நவீனத்துவ வாதிகளான அசோகமித்திரனஇ; இந்திராஇ பார்த்தசாரதிஇ சுந்தர ராமசாமி ஆகியோர்கள் முன் வைத்தார்கள். சுந்தர ராமசாமி எழுதிய ஜே.ஜே சில குறிப்புகள் தமிழில் வந்த நவீன நாவல்களில் முக்கியமான நாவலாகும். அவரது புளிய மரத்தின் கதையும் எதார்த்த வடிவில் இருந்தாலும் நவீனத்துவத்தை உள்ளடக்கியதாகும்.

““நவீனத்துவப் படைப்புகளை அடையாளப்படுத்தும் முக்கிய கூறாக மரபுமீறலைக் குறிப்பிட வேண்டும். மரபுமீறலே நவீனத்துவம் என நவீனத்துவத்தை சுருக்கமாக வரையறை செய்துவிட முடியும்” என ஆலன் ராட்வே குறிப்பிட்டுள்ளார். ஜே.ஜே சில குறிப்புகள் நாவலில் அழுத்தமாகப் படிந்து விட்டிருக்கும் நவீனத்துவக் கூறும் இதுவே”2.

தமிழில் எதார்த்த வாத நாவல்கள்:

தமிழில் எதார்த்த வாத நாவல்கள நவீனத்துவ காலத்திற்;குப் பிறகு தலை தூக்கின. குறிப்பாக ஒரு குறிப்பிட்ட எதார்த்த களம் இல்லாமல் பன்முக பண்பாட்டை பேசுகின்ற எதார்த்த களம் முன்வைக்கப்பட்டது. தனுஷ்கோடிஇ ராமசாமி மேலாண்மைஇ பொன்னுசாமிஇ சந்திர கணேசனஇ; சோ தர்மன் ஆகியோர்கள் பன்முக எதார்த்தம் கலந்த நாவல்களை முன்வைத்தார்கள். இந்த பன்முக்; எதார்த்த நாவல்கள் ஆரம்பத்தில் பொதுவான மொழியில் பேசினாலும் பின்னர் வட்டார தன்மை கலந்த மொழியில் பேச தொடங்கின. வட்டார மொழி என்று வருகின்ற பொழுது அது விளிம்பின் குரலாகவும் உதிரிகளின் குரலாகவும் இனவரைவியல் அடையாளத்தை முன்வைக்கின்ற ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவும் ஒலிக்கின்றது. தமிழில் மிகப் பெரிய தாக்கத்தை உருவாக்கிய நாவலாசிரியரான தி. ஜானகிராமன் தஞ்சை மக்களின் கிராமத்து வாழ்க்கையை முன்வைத்தார். கி. ராஜ நாராயணன் கரிசல் காட்டு இரத்தமும் சதையுமான வாழ்க்கையை முன்வைத்தார். நீலபத்மநாபன் ஒரு இனவரைவியல் அடையாளத்தோடு முன்வைத்த ‘தலைமுறை நாவல்’ தமிழில் வெளிவந்த முதல் வட்டார நாவல் என்று ஆய்வாளர்களால் பேசப்படுகிறது. அது போல கடலோர கிராம வாழ்க்கையை எழுதிய தோப்பில் முகம்மது மீரான் ஜோடிகுருஷ் போன்றவர்கள் முக்கியமானவர்கள்.

பொன்னீலனின் மறுபக்கத்தின் அரசியல்:

சமகாலத்தில் தமிழ் இலக்கியத்தில் உலக இலக்கியத்தின் தாக்கங்கள் வந்த பிறகு பொன்னீலன் எழுதிய மறுபக்கம்இ சாதிஇ மதம்இ வர்க்கம் சார்ந்த ஒரு அரசியலை மண்டைக்காட்டு கலவரம் நிகழ்ந்த நிகழ்வின் அடிப்படையில் ஒரு குறியீட்டு பார்வையாக பார்க்கிறது. மறுபக்கம் நாவலில் நாட்டார் அடையாள குரல்கள்

அதிகமாக இருப்பதைக் காணலாம். விடுதலைக்குரல் இந்துத்துவ எழுச்சிக்கான காரணங்கள் கிறிஸ்தவ மதமாற்றம் ஆதிக்க ஜாதிகளால் எழும் எதிர்விளைவுகள் போன்றவற்றை கட்டுடைத்து காட்டுகிறார். இன்னும் கொஞ்;சம் தெளிவாகச் சொன்னால் மதங்களின் அடையாள அரசியலை மையப்பொருளாக கொண்டிருப்பதைப் போல காட்சியளிக்கும் இந்த நாவல் உண்மையில் மதங்களுக்கு பின்னால் ஜாதியையுமஇ; மத மோதல்களுக்கு பின்னால் ஜாதி துவேசங்களையும் கண்டடைகிறது. இது லத்தீனஇ; அமெரிக்காஇ நாவல்களிலும் வேர்களை தேடுகின்ற பழங்குடி நாவல்களிலும் நாம் கண்டறியலாம். சமூக பொருளாதார உற்பத்தி உறவுகளில் ஒட்டுமொத்தமாக விளங்கும் சமுதாய இருப்பு என்கின்ற அடித்தளத்தைப் பற்றி அதிகம் பேசாமல் ஜாதி என்ற அமைப்பிலுள்ள பல்வேறு சிக்கல்களை இந்த நாவல் பேசுகிறது.

இந்த நாவலின் வெற்றி என்பது வரலாற்றுக்குள்ளும் தொன்மங்களுக்குள்ளும் கதைகளுக்குள்ளும் உண்மையை தேட நாவலாசிரியர் விழைகிறார். சகல தரப்பு மக்களின் குரல்களையும் இயல்பாக பதிவு செய்கிறார் என்று கூறலாம்.

தமிழில் நாவலில் பின்நவீன கூறுகள்:

நவீனத்துவ காலகட்டத்திற்கு பிறகு பின்நவீனத்துவம் பொது தன்மையை கேள்வி கேட்க தொடங்கியது. நவீனத்துவத்திலிருந்து பின்நவீனத்துவம் பல இடங்களில் முரண்பட்டது. பின்நவீனத்துவ கூறு நாவல்களில் வெளிபட தொடங்கிய பிறகு தான் பொதுதன்மை உடைந்து வட்டார தன்மைக்கு முக்கியத்துவம் கிடைத்தது. வரலாற்றை தக்க பூர்வமாக அலசும் வரலாற்று வாதத்தை பின்நவீனத்துவம் நிராகரித்தது. பின்நவீனத்துவம் இரட்டைப்படுத்துதலை எற்கவில்லை. குறிப்பாக ஒருவன் நல்லவனஇ; கெட்டவன் என்பதை திட்டவட்டமாக வரையறை செய்ய முடியாது என்று கூறுகிறது. அதுபோல எல்லாவற்றையும் முழுமையாக பார்க்க கூடாது என்று பின்நவீனத்துவம் பேசுகிறது. இலக்கியம் என்பது கலைகளை உருவாக்குகின்றன. அதை உன்னதமாக்கல் என்று சொல்கிறார்கள். உன்னதமாக்கலுக்கு அப்பாற்பட்ட நிலையே கலையாகும்.

சில பின்நவீனத்துவம் நாவலாசிரியர்களும் நாவலர்களும்:

பிரேம் ரமேஷஇ; சாரு நிவேதிதாஇ கோணங்கிஇ ஜெயமோகனஇ; எஸ் ராமகிருஷ்ணனஇ; பா. வெங்கடேஷ்இ தமிழவன்இ எம்.ஜி.சுரேஷ் போன்றவர்கள் பின்நவீன எழுத்து வகையில் எழுதிய மிகமுக்கியமான நாவலாசிரியர்கள் பாழிஇ பிதிராஇ வீறோ புகிரிஇ காவல் கோட்டம்இ நெடும் குருதி போன்ற நாவல்கள் பின்நவீன கூறுகளைப் பேசிய மிகமுக்கியமான நாவலாகும். இந்த நாவல்களில் மாந்தீரிக எதார்ந்த கூறுகள் இருப்பதை காணலாம்.

தமிழ் நாவல் இலக்கியத்தில் பல்வேறு முகங்களில் பல்வேறு பரிணாமங்களில் பின்நவீனத்துவம் தன்னை வெளிப்படுத்தியது. பாலியல் எழுத்து பிரதிகளின் உள்ளாட்டம் மாந்தீரிக எதார்த்தம் அறிவியல் கதையாடல் மர்ம கதையாடல் போன்றன பின்நவீனத்துவ பிரதிகளில் முக்கியமாக கூறலாம். சாரு நிவேதிதாவின் பல நாவல்கள் இதற்கு எடுத்துக்காட்டாக கூறலாம். இவரது நாவல்கள் பாலிய வக்கிரங்களையும் பாலியல் பிறன்வுகளையும் பேசின.

தமிழ் நாவல்களில் மாந்தீரிக எதார்த்தம்:

உலக இலக்கியத்தின் தாக்கத்தில் மாந்தீரிக எதார்த்த பாணி நாவல்கள் தமிழில் அதிகமாக வந்தன. யுவன் சந்திரசேகர் எழுதிய பகடையாட்டம்இ குள்ள சித்திரன் சரிதம்இ கானல் நிலவில் ஆகிய நாவல்கள் அபத்தத்தையும் நினைவுக்கும் இருப்புக்குமான வளபாட்டத்தையும் எடுத்துரைத்தன. பிரேம் ரமேஷின் "சொல் என்றொரு சொல்" நாவல் மையமற்ற தன்மையையும் தொடர்ச்சியற்ற தன்மையையும் பேசுகிறது. எம். ஜி சுரேஷின் "யுரைகா என்றோரு நகரம்" '37' சிலந்தி ஆகிய மூன்று நாவல்களும் மர்மமும் அறிவியலும் நிறைந்த கதைகளாக வெளிவந்நன. 37 என்ற நாவல் வேற்றுகிரக மனிதர்கள் பற்றி புனைவாக வந்தது.

தமிழவனின் ஜி. கே எழுதிய மர்ம நாவல் துப்பறியும் நாவலுக்குரிய மர்ம தன்மையுடன் விளங்கின. இவ்வாறு ஒரு தனித்துவ அடையாளத்தோடு உலக இலக்கியத்தின் தாக்கத்தோடு வெளிப்பட்டது. அதன் பிறகு மிக அழுத்தமான ஒரு உரையாடலுக்கு சமகால நாவல்கள் பின்காலனிய சிந்தனை போக்கில் அமைவதைக் காணலாம்.

"தேசிய விடுதலைப் போராட்டங்கள் அவற்றின் முன்னெடுப்புகள் போதாமைகள் அரசியல் விடுதலைப் பெற்ற பின் கைமாறிய அதிகாரங்கள் காலனிய நவீன் மாற்றங்களை மீறித் தொடரும் நிலவுடைமைஇ சாதியஇ மதஇ பாலின ஒடுக்கு முறைகளஇ; காலனிய நவீனம் சாத்தியமாக்கிய உடைப்புகள் இச்சமூகங்களின் உட்கூறுகளில் இருந்த மேற்கிளம்பும் புதிய போராட்டங்கள் மாறிவரும் உலகமயமாக்கலால் இத்தேசங்களில் ஏற்படும் சிதைவுகள் உருமாற்றங்கள் இத்தேசங்களுக்குள் நடக்கும் இனப்போராட்டங்கள் என்று பின் காலனிய சமூகங்களின் வரலாறுகள் சிக்கல்கள் மிகுந்தவையாக மாறியுள்ளன"3.

இவற்றை மையப்படுத்தி புதிய நாவல்கள் முயற்சிகள் தொடர்கின்றன. மேலை நாட்டு சித்தாந்தங்கள் கோட்பாட்டு உருவாக்கங்கள் அனைத்தும் கீழை தேச நாடுகளின் சிநதனையில் புதுவிதமான தாக்கங்கள் பெற்று தமிழ் நாவல்களிலும் வடிவ ரீதியாகவுமஇ; உள்ளடக்க ரீதியாகவும் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதை உணரலாம்.

முடிவுரை:

தமிழ் நாவல் பயணம் உலக நாவல்களுடைய சிந்தனை வடிவத்தை உள்வாங்கி உள்ளடக்க ரீதியாகவுமஇ; வடிவ ரீதியாகவும் பல்வேறு விதமான மாற்றங்களை அடைந்தள்ளது. எல்லா வகையான எழுத்து முறை சார்ந்த சாத்தியப்பாடுகளும் தமிழ் நாவலில் நடந்துள்ளன. புதிய தலைமுறை எழுத்தாளர்களுக்கு மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் விரல் நுனியில் கிடைக்கின்ற அளவுக்கு நம்மை தொழில் நுட்ப உலகம் சூழ்ந்துள்ளதால் ஆரோக்கியமான பாதைக்கு நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்பதை இவ்வாய்வு கட்டுரை வழியாக உணரலாம்.

அடிக்குறிப்புகள் :

வண்ண நிலவன்இ இந்து தமிழ் மேஎ 2016

டாக்டர். அ. சஜன் நவீனத்துவம்இ சுந்தர ராமசாமி முன்வைத்து ப. 96.

அ. மங்கை பின்காலனியம் ப. 4.